Deposition of Witness for : PW-1 | Date : 22/11/2022
Case No. : O.S.497/2019 | Nationality : Indian
Name : துரை | Religion :
Father's/Husband's Name : கிருஷ்ணமூர்த்தி | Age :64
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்ந்து 5 பேர் ஆவார்கள். முதலில் நான், இரண்டாவது ராஜேந்திரன், 3 வது கிட்டு, 4 வது ரமேஷ், 5 வது முருகன். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டின் நீள, அகலம் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கு கொல்லைப்புற கதவு கிடையாது என்றால் சரிதான்.

எனது வீட்டின் கிழக்கு பக்கத்தில் ஒரு சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த சந்து எத்தனை அடி சந்து என்றால் 4 அடி சந்தாகும். அந்த சந்தினை பொதுப்பாதையாக அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். எனது வீட்டின் பின்பக்கம் வீட்டை ஒட்டினாற்போல் மாட்டுகொட்டகை உள்ளது என்றால் சரிதான். மாட்டு கொட்டகைக்கு அடுத்து ஒரு நாட்டு ஓடு போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் எனது சகோதரர் முருகன் குடியிருந்து வருகிறாரா என்றால் இல்லை. மேற்படி வீட்டில் எனது சகோதரர் முருகன் குடியிருந்து வருகிறார் என்றாலும், 1 ம் பிரதிவாதி வீட்டில் இருந்து அவரது வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் குடியிருந்து வரும் வீட்டின் மனைப்பகுதி நத்தம் மனைப்பகுதி என்றால்

சரிதான். எங்களுக்குள் பிரச்சனை ஏற்படுவதற்கு முன்பு சகோதரர்கள் அனைவரும் கூட்டுகுடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் எப்போதும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தது இல்லை. நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு அடிப்பகுதியை 2ம் பிரதிவாதி தான் கட்டி கொடுத்தார் என்றாலும், அதன் பிறகு தான் நான் வீடு கட்டி கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனது வீட்டில் எத்தனை நபர்கள் என்றால் 4 நபர்கள் உள்ளோம். எனது வீட்டில் உள்ள மற்ற அனைவரும் வேலை எதுவும் செய்யவில்லை.

மாட்டுகொட்டகையில் உள்ள மாடுகளை யார் பார்த்துகொள்கிறார்கள் என்றால் வீட்டில் உள்ளவர்கள் பார்த்து கொள்கிறார்கள். எத்தனை மாடுகள் உள்ளது என்றால் 2 மாடுகள் உள்ளது. தாவா சொத்தின் அமைப்பினை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிடுவதில் எனக்கு ஏதும் ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை இல்லை. நான் சுவாதீனம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. பிரதிவாதிகள் எனது இடத்தில் மாட்டை கட்டியதால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.